# இணையதளத்தை

## பற்றி அறிந்து கொள்வோம்



# இணையத்தளம்

# பயனுடையதும் ஆச்சரியத்தை வரவழைப்பதுமான ஒரு இடமாகும்.

இணையத்தளத்தை நாம் பல்வேறு நன்மைகளை பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்திக்கொள்ளலாம்.

- எமக்கு தகவல்களை தேடி அறிந்துகொள்ளலாம்.
- நண்பர்களுடன் உறவினை பேணலாம்
- புதிய இடங்களையும் கலாசாரங்களையும் அறிந்துகொள்ளலாம்.

ஆயினும் இதனை நாம் தவறாக பயன்படுத்துவோமாயின் அது எம்மை பல்வேறு இன்னல்களுக்கு இட்டுச்செல்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

- எமது எதிர்காலத்தையும் நன்மதிப்பையும் நாசப்படுத்தும்
- எம்மை சட்ட சிக்கல்களுக்குள் தள்ளிவிடும்
- பாடசாலையுடனும் பெற்றோருடனும் எமக்கு சிக்கல்களை ஏற்படுத்திவிடும்.



**ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்:**

இணையத்தளத்தைப் பயன்படுத்தும் போது நீங்கள் புத்திசாதுரியமாக இருக்க வேண்டும்.


**நில்லுங்கள்! சிந்தியுங்கள்! கவனமாக இருங்கள்!**


என்ன ராதா, ஏதாவது பிரச்சினையா?
10B Class room
பாரேன் சுமதி, எனக்கு ஒரு பெரிய பிரச்சினை, என்ன செய்றதுன்னு தெரியல
நீ என்ட நண்பி. அதனால பயப்படாத. எனக்கு சொல்லு. நா உனக்கு உதவுறன்.
நான் சயன்ஸ் டியுஷன் போன நேரம் ரவி என்டு ஒரு பெடியனை சந்திச்சேன். நாங்க ரெண்டு பேரும் எந்தநாளும் கதைக்க ஆரம்பிச்சோம். எனக்கு தெரியாமலயே ரவி எனக்கு மிகவும் நெருங்கிட்டான்.
அப்ப???



அவன் சொல்றான் கிளாஸ் முடிஞ்ச பிறகு என்னைய தனியா சந்திக்கனுமாம்.
உனக்கு தெரியும் தானே, எங்கட அப்பா சரியான கண்டிப்பான ஒருத்தர். அதனால நான் முடியாதுன்னு சொல்லிட்டன்.
அதற்கு பிறகு என்ட போட்டோ ஒன்ற அனுப்ப சொல்றான். அவனும் எனக்கு ஒரு போட்டோ அனுப்பி இருக்கான். அவன் சரியான ஹென்சம்! நானும் என்ட போட்டோ ஒன்ட அனுப்புனன்.
ராதா ! அப்படி போட்டோ அனுப்புறது அவ்வளவு நல்லது இல்ல தானே !
நாங்க கவனமா இருக்கோனும்.
சரி, அதற்கு பிறகு என்ன நடந்ததென்னு சொல்லேன்
நான் ரொம்ப அழகா இருக்கேன்னு அவன் சொல்றான். பிறகு நான் இன்னுமொரு போட்டோ அனுப்பிவைச்சன். சாரி கட்டி முற்றத்தில இருந்து எடுத்த படம் ஒன்றையும் அனுப்பினன்.அது பார்த்துட்டு ரொம்ப ஆசப்பட்டான்.
ஆனா இப்ப ஒரு கிழமையா என்னுடைய ஒன்டு ரெண்டு உடுப்ப கழற்றிட்டு படம் ஒன்டு எடுத்து அனுப்ப சொல்றான். ரவி சொல்றான் அப்ப அவன் எனக்கு இன்னும் நெருங்கிருவானாம்.


அப்ப நீ என்ன செய்த?
அப்படியெல்லாம் போட்டோ அனுப்ப எனக்கு பிடிக்காது சுமதி, நேற்று கூட அதனால் ரெண்டு பேரும் சண்ட போட்டுக்கிட்டோம். இது எனக்கு பெரிய பிரச்சினயா இருக்கு.
ரவி என்ன விருப்புறானாம், முழு வாழ்கையயைம் என்னோட வாழனுமாம்.நானும் அவன விரும்புறதா இருந்தா அப்படி ஒரு போட்டோ அனுப்புறது பிரச்சினையா இருக்காதாம்.
ரவிட நண்பர்களோட "கேர்ள் ப்ரென்ஸ்" எல்லாம் அவனோட நண்பர்களுக்கு இப்படியான போட்டோ எல்லாம் அனுப்பி இருக்காங்களாம். எனக்கு அவன் மேல நம்பிக்கை இல்லையான்னு கேக்குறான்.
எனக்கு இத செய்ய முடியாது. ஆனா அவனோட சண்டை போட நான் விரும்பல்ல சுமதி, என்ன செய்றதுன்னு எனக்கு புரியல.
(அழுகின்றாள்) சுமதி ராதாவின் கையைப்பற்றுகின்றாள்)


சப்னா என்ட புத்தகத்த கொண்டு போனா. இன்டைக்கும் எனக்கு ஒரு தாள்ல தான் கணக்கெல்லாம் செய்ய வேண்டி வரும். அவளோட வீட்டுக்கு போயாவது வாங்கி வரனும்.
பிள்ள சுமதி ,கண காலத்திக்கு பிறகு தான் காணுறன் எப்படி இருக்க?
நான் சுகமா இருக்கன் ஆண்டி, சுப்ளா எங்க? இந்த நாட்கள்ல அவ இஸ்கூலுக்கும் வரெல்லயே.சுகமில்லையா ?
ஓம்,ஓம் அந்த அறையில இருக்கா.கொஞ்சம் சுகமில்லை என்டு தான் சொல்றா. ஆனா டொக்டர்கிட்ட போகவும் முடியாதாம் வீட்டுக்குள்ள வாங்க.
சுப்ளா ...... நான் சுமதி


சுப்ளா, என்ன இது?? ஏன் இப்படி இருக்க? சுகமில்லையா? இல்ல வேறேதும் பிரச்சினையா?
நீ நல்ல நேரத்தில வந்த சுமதி. எனக்கு ஒரு சின்ன பிரச்சினை. என்ன செய்றதுன்னு புரியல அடடா உன்ட புத்தகமும் என்கிட்ட இருக்கு மறந்தே போயிட்டேன் சொரி சுமதி.
போறப்போ புத்தகத்தை எடுக்கலாம். நீ என்ட நண்பி. அதனால சொல்லு உனக்கு என்ன நடந்திருக்குன்னு?
நான் கொஞ்ச நாளா Facebook இல எதுவும் எழுதல சுமதி, உண்மையத்தான் சொல்றன். உனக்கு ஞாபம் இருக்கா சில மாதத்திற்கு முன்ன கிறிசானியும் நானும் இஸ்கூல்ல சண்டை போட்டுக்கிட்டோம். அதற்கு பிறகு அவ என்னோட கதைக்காம என்ன ஒதுக்க ஆரம்பிச்சா.


நான் நினைச்சன் சரியா போயிறும்னு, ஆனா அப்படி நடக்கல்ல. சில வாரத்திற்கு முன்ன கிறிசானி எனக்கு Facebook ச்செட் செய்தி அனுப்ப ஆரம்பிச்சா
ஆ...! அவ என்ன சொன்னா?
தொடக்கத்தில, அவ என்னைப் பத்தி கூடாத குற்றச்சாட்டெல்லாம் கொண்டுவந்தா. நாளுக்கு நாள் அவ எனக்கு அனுப்பின செய்தியெல்லாம் ரொம்ப மோசமாயிட்டது. என்னோட நடத்த சரியியல்லையாம். என்னப் பற்றி எனது கடந்த கால வாழ்கையை பற்றி எல்லாம் அவளுக்கு தெரியும்னு சொன்னா
ம்.... இதன்ட அர்த்தம் என்ன? இத நிறுத்திடுன்னு நீ செ ல்லலயா?
அவ என்ன செய்றான்னு எனக்கு புரியல கிறிசானி இப்ப எந்தநாளும் என்ட Facebook இற்கு செய்தி அனுப்புறா. அந்த செய்தகள வாசிக்கிறதுக்கே அருவருப்பா இருக்கு. எனக்கு என்ட குயஉநடிழழம பக்கத்திற்கே போகவே பயமா இருக்கு. எனக்கு நித்திர செய்யவும் முடியல. சாப்பிடவும் முடியல. படிக்கவும் முடியல. நான் சிக்கலில் மாட்டிக்கொண்டு இருக்கன்.
நீ என்ன நுவங்கி, கிறிசானியோட வேலையால நீ நிறைய குழம்பிட்ட
ஆமாம் நுவங்கி போன கிழமை கிறிசானி எனது Facebook பக்கததில எழுதியிருந்தா "நீ ஒரு பெரிய பொய்காரி, ரொம்ப மோசமான ஒருத்தி, எனக்கு உன்ன பற்றி எல்லாம் தெரியும், நான் உன்ன பற்றி எல்லார்கிட்டேயும் சொல்லுவன்" எனக்கு யாருக்கும் முகம் கொடுக்க முடியாது சுமதி.


மற்ற நண்பிகள் எல்லாம் என்ன பத்தி என்ன நினைக்கிறாங்களோ தெரியாது ..... அந்த எல்லாரும் என்ன ஒதுக்கிவச்சிடாங்கன்னு தான் நினைக்கிறன். எனக்கு ஸ்கூலுக்கு போக விருப்பமா இல்ல... ஏன் கிறிசானி எனக்கு இபபடி செய்றா?
கிறிசானி செய்நது தவறானது சப்ளா
அது சரி. ஆனா நான் என்ன செய்றது?
எங்களுக்கு அறிமுகமில்லாத ஒருவர் இன்ட்டநெட் வழியா எங்கள துன்புறுத்தினால் நாங்க முதலாவதா எங்களுக்கு நிறைய நம்பிக்கையான ஒரு பெரியாளுக்கிட்ட அதை பற்றி சொல்லனும்.


ஆனா
நீ கிறிசானிய இஸ்கூல்ல சந்திப்ப தான ......நாங்க அவளோட பேசுவோம். இந்த விடயத்த நிறுத்த சொல்லி சொல்லுவோம்.
ஆனா
இந்த விடயத்த அவ தொடர்ச்சியா செய்து கொண்டு போனா கட்டாயமா ஒரு பெரியாளுக்கு இத சொல்லவேண்டி வரும் சப்ளா. நான் உன்னோட இருக்கன். எங்க நண்பிகளும் எங்களோட இருக்காங்கதான.
நீ என்ன நம்புறேன்னு சொல்றது எனக்கு பெரிய பலமா இருக்கு சுமதி! நீ சொல்றது சரி.........
நான் கிறிசானிக்கிட்ட பேசிப் பார்க்கிறன். நீ எனக்கு நல்லதொரு தோழி.

# இணையவழி துன்புறுத்தல்கள்


டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வேண்டுமென்றே மற்றையவர்களை துன்புறுத்தும் தொடர்ச்சியான நடத்தை.

**உங்களை இணையத்தளத்தின் வாயிலாக துன்புறுத்துவதிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள்.**

- எவரையும் துன்புறுத்தக்கூடிய அல்லது சங்கடத்திற்கு உள்ளாக்கூடிய எதனையும் இணையத்தளத்தின் வாயிலாக பரிமாறிக்கொள்ளாதீர்கள்
- உங்கள் கடவுச்சொல்லை பாதுகாப்பாகவும் பிரத்தியேகமாகவும் வைத்துக்கொள்ளுங்கள்
- பிரத்தியேக அமைநிலைகளை (privacy settings) தனிப்பட்ட ரீதியில் வைத்துக்கொள்ளுங்கள்.
- உங்கள் நண்பர்கள் பட்டியலில் அறிமுகமில்லாதவர்களை சேர்த்துக்கொள்ளாதீர்கள்
- மற்றையவர்களின் தகவல்களை குழப்பாதீர்கள்
- நீங்கள் இணையத்தளத்தின் வாயிலாக என்ன செய்கின்றீர்கள் என்பதைப் பற்றி உங்கள் பெற்றோர் அறிந்துகொள்ளச் செய்யுங்கள்
- ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்! நீங்கள் மரியாதையை எதிர்பார்க்கும் அளவிற்கு மற்றையவர்களுக்கும் மதியாதை செலுத்துங்கள்.

**நீங்கள் இணையத்தளம் வாயிலாக துன்புறுத்தப்பட்டால் என்ன செய்ய வேண்டும்.**

- பதிலளிப்பதற்கோ அல்லது பழிவாங்குவதற்கோ முயற்சிக்காதீர்கள்
- தொழில்நுட்பத்திலிருந்து சற்று விடுபடுங்கள் (சில நாட்களுக்கு பயன்படுத்தாமல்)
- அவர்களுடைய நடத்தையைப் பற்றி அறிவியுங்கள்
- “தவறான பாவனையைப் பற்றி அறிக்கையிடுதல்” பொத்தானை பயன்படுத்தவும்
- துன்புறுத்துபவரை முற்றாக தடைசெய்து நீக்குவிடுங்கள்
- புதியதொரு மின்னஞ்சல் முகவரியையோ அல்லது புதிய தொலைபேசி இலக்கத்தையோ பயன்படுத்த ஆரம்பிக்கலாம்
- இணையத்தள சேவை வழங்குனருக்கு (ISP) முறைப்பாடு செய்யுங்கள்
- மின்னஞ்சல், அளவளாவல் தொடர்புகள் அல்லது குறுஞ்செய்திகள் போன்றவற்றுடன் தொடர்புடைய தகவல்களைபதிவுசெய்துகொள்ளுங்கள்
- இலத்திரனியல் தொடர்பாடல் செய்திகளை திருத்துதவதற்கு முயற்சி செய்ய வேண்டாம்.
- உங்களுடைய பிரச்சினையை பற்றிய நம்பிக்கையான வயதுவந்த ஒருவருடன் பேசுங்கள்.


என்ன நடந்திச்சி, அது யார்? அந்த ஆள உனக்கு தெரியுமா? அந்த மனுஷன் உன்ன பலாத்காரமாக உன்ன காருக்கு உள்ளே நுழைக்க பார்த்தானா?
அவர் என்னய பலாத்காரமா கார்ல போட்டுக்கொள்ள பார்த்தார் நுவங்கி.நல்ல நேரம் நீ வந்திட்ட. இல்லாட்டா என்ன நடந்திருக்குமோ தெரியாது. எனக்கு பயமா இருக்கு சுமதி
சரி.
இப்ப நீ என்னோட தான இருக்க. பயப்படாத. ஆனா எனக்கு விளங்கல்ல ஏன் அவன் உன்ன பலாத்காரமா கார்ல போட்டுக்கொள்ள பார்க்கனும்? எனக்கு நீ முதல்ல இருந்து சொல்லு.


சரி...... நான் முதலாவதா அவர Facebook மூலமா தான் தெரிஞ்சுக்கிட்டன்.அவர் என்னோட போட்டோவ பார்த்துட்டு ப்ரெண்ட் ரிக்வெஸ்ட ஒன்று அனுப்பினார். அவரோட படம் ரொம்ப அழகா இருந்தது. அதனால நானும் ரிக்வெஸ்ட ஏற்றுக்கொண்டன். எந்தநாளும் ஸ்கூல் முடிஞ்சு அவரோட பல மணித்தியாலம் Facebook ல பேசுனன். நான் அவருக்கு ரொம்ப நெருங்கிட்டன்னு நினைச்சன்.
என்ன சச்சி! அறிமுகமில்லாத ஆடகளோட இன்டநெட்ல பேசுறது சரியில்லயே. அப்ப....அப்ப..... அதுக்கப்பறம் என்ன நடந்திச்சி
அம்மாவும் அப்பாவும் எதுக்காவது என்னய ஏசி எனக்கு சரியான கவலையா இருந்தா நான் சொல்றதெல்லாம் அவர் நல்லா கேட்டிட்டு இருப்பாரு. அவர் என்னப்பற்றி நல்ல புரிஞ்சிகிட்டு இருக்காருன்னு நினைச்சன்.
அவர் ரொம்ப நல்லவர்னு நினைச்சன். ஒரு தடவ என்ட ஸ்கூல் நோட்ஸ் கொஞ்சம் காணாம போணப்ப அவர் தான் அதெல்லாம் தேடிப்பிடிச்சி எனக்கு ஈமெயில் மூலமா அனுப்பிஇருந்தாரு.


அவர
நான் ஒரு நாளும் சந்நிச்சி இருக்கல்ல என்டாலும் ஏதோ நீண்ட நாள் பழகின மாதிரி ஒரு பிரம்ம தான் எனக்கு இருந்து. அவருக்கு என்ட வாழ்கையும் எனக்கு அவர்ட வாழ்கையும் நல்லா புரிஞ்சிருக்குன்னு நினைச்சன்.
அவர்
அம்மா அப்பா பற்றியும் இருக்கிற இடத்தப் பற்றியும் ஸ்கூல பற்றியும் கேட்டாரு. நான் கொஞ்சம் கூட யோசிக்காமல் எல்லாத்தையும் சொல்லிட்டன்.
அவருக்கு என்ன பற்றி எல்லாமே தெரியும் சுமதி.
அட
அசடு. உனக்கு தெரியாமலேயே அவன் உன்ட எல்லா விபரத்தையும் தெரிஞ்சிக்கிடான் போல இருக்கு.
எங்கட தனிப்பட்ட விபரங்கள், எங்க போரோம் வாரோம் என்ன செய்றோம் இப்படிப்பட்ட விடயமெல்லாம் தெரியாத ஆட்களுக்கு சொல்றது நல்லதில்லயே சச்சி.
ஆமா
உண்மைதான் ..... சுமதி. சில கிழமைக்கு முன்ன என்ன தனியா சந்நிகனும்னு சொன்னாரு. நான் முடியாதுன்னு சொன்னன்.
அது நல்லது. இன்டநெட்ல சந்திக்கிற பரிச்சயம் இல்லாத ஆட்கள போய் நேரில சந்திக்கிறது நல்லதில்ல


ஆமா...
நான் இன்டைக்கு அவர கண்டு ஆச்சரியப்பட்டுட்டன். என்னய வீட்டில இறக்கி விடுறதா சொல்லி காரில ஏற சொன்னார். ஆனா நான் ஏறல. எனக்கு ஏதோ ஒரு மாதிரியா இருந்தது.
இன்டைக்கு தான் இவர சந்திச்சிருக்கன். அவர பற்றி எனக்கு நிறைய விபரமும் தெரியாது. எனக்கு ரொம்ப பயமா இருந்தது. நான் முடியாதுன்னு சொன்ன உடன அவருக்கு கோபம் வந்திட்டது. என்னய அச்சுறுத்தி வாகனத்தில நுழைச்சிக்கொள்ள பார்த்தாரு. அந்த நேரத்தில தான் நீ வந்திட்ட. எனக்கு ரொம்ப பயமா இருக்க சுமதி . நான் இப்ப என்ன செய்றது?
நல்லது சச்சி . உனக்கே விளங்கி நீ அந்த காரில ஏறாதது நல்லது. நீ சரியான துணிச்சல்காரி. இப்ப உன்ட எல்லா விபரமும் அவன்கிட்ட இருக்குதே. அதனால நாங்க எங்களுக்கு நம்பிக்கையான ஒரு பெரியவரிடம் சொல்லுனும்.
ஓம்...ஓம் அது சரி. அந்த மனுஷன் ஒரு நல்ல ஆள் இல்லன்னு எனக்கு இன்டைக்கு தெரிஞ்சிடுச்சி. அந்த ஆள் இத்தனை நாள என்கிட்ட போட்டது வெறும் வேஷம் உன்ட ஆலோசனைக்கு ரொம்ப நன்றி சுமதி.
சரி பிள்ள, வா போவோம் எங்கட வீட்டுக்கு . எங்க அம்மா ஒரு விஷேமான சாப்பாடு செய்றா, அதையும் சாப்பிட்டுட்டு அம்மாவோட உங்கட வீட்டுக்கு போவம். நாங்க உன்ட அம்மாவக்கு இத சொல்லுவம் என்ன?
சுமதி!
எனது வீட்டில உள்ளவங்க என் மேல அன்பு வச்சிருக்கிறாங்க. தப்பு செய்திட்டாலும் என்ன மன்னிச்சிடுவாங்க. சரி வா வீட்டுக்க போவம்.

# தவறான எண்ணத்துடன் நட்புறவு கொள்ளுதல்

பிள்ளைகளுடனும் கட்டிளமைப்பருவத்தில் உள்ளவர்களுடனும் பாலியல் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்வதற்கு விருப்பம்கொண்ட சில வயதுவந்தவர்கள் இருக்கின்றனர் இவ்வாறானதொரு பாலியல் தொடர்பினை தங்களுடன் ஏற்பத்திக்கொண்டால் பரவாயில்லை என்று தோன்றும் மனோபாவம் ஏற்படும்வகையில் அவர்கள் இந்த சிறுவர்களுடனான தொடர்புகளை கட்டியெழுப்புகின்றனர். இவ்வாறக பிள்ளைகளுடன் ஏற்படுத்திக்கொள்கின்ற நட்பு "தவறான நோக்குடன் நட்புறவு கொள்ளுதல்" எனப்படுகின்றது. துஷ்பிரயோகம் தனது தவறினால் தான் இடம் பெறுகின்றது எனும் நிலையை பிள்ளைகளுக்கு தோற்றுவிப்பதும் இதில் உள்ளடங்குகின்றது. ஆயினும் இது பிள்ளைகளின் தவறு அல்ல.

**தவறான நோக்குடன் நடபுறவு கொள்பவர்கள்**

- பசப்பு வார்த்தைகளை பேசுவார்கள்
- அலங்கார பரிசுப் பொருட்களை அனுப்புவார்கள்
- வயதுவந்தவர்கள் பேச வேண்டிய விடயங்களையும் படங்களையும் பற்றி சிறுவர்களுடன் பேசுவார்கள்
- குடும்பத்திலிருந்து உங்களை தூரவிலக்குவார்கள்
- உங்கள் நண்பர்களிடமிருந்து தூரவிலக்குவார்கள்
- அந்தரங்கமான விடயங்களைப் பற்றிய படங்களை பகிர்ந்துகொள்வார்கள் அல்லது அனுப்புமாறு கோருவார்கள்
- ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்! அது உங்களின் தவறு அல்ல! உதவியை நாடுங்கள்!

**தவறான நோக்கத்துடன் பழகுபவர்களுக்கு பதிலளித்தல்**

- நண்பர்கள் பட்டியலிருந்து நீக்குங்கள் அல்லது தடைசெய்யுங்கள்
- அவர்களுடைய நடத்தையைப் பற்றி அறிவியுங்கள்
- அவர்களுடன் தொடர்புகளை பேண வேண்டாம்
- அவர்களை இணையத்தளத்திற்கு புறம்பான முறையிலும் சந்திக்க வேண்டாம்
- பெற்றோர் ஒருவருடன் அல்லது பொறுப்புவாய்ந்த ஒருவருடன் கலந்து பேசுங்கள்

**பாதுகாப்பான கலந்துரையாடலுக்கான குறிப்புகள்**

- இணையத்தளம் வாயிலாக சந்திப்பவர்களில் எவரை நம்பலாம் என்பதைப் பற்றி மிகக் கவனமாக இருப்பதுடன் சில இணையத்தள "நண்பர்கள்" எவ்விதத்திலும் அறிமுகமல்லாதவர்கள் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்
- எவ்வாறான விடயங்களையும் பகிர்ந்துகொள்வதற்கு முன்னர் நன்றாக யோசித்துப்பாருங்கள்
- உங்கள் தனிப்பட்ட விபரங்களை பிரத்தியேகமாக வைத்துக்கொள்ளுங்கள்
- உங்கள் இருப்பிடத்தை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூற வேண்டாம்
- உங்களுக்கு கதைக்க தேவையில்லையென்று கருதும் எந்தவொரு நபரையும் தடை செய்து விடுவதற்கு தயங்கவேண்டாம்.
- பிரத்தியேகமான கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு முன்னர் யோசித்துப் பாருங்கள்
- ஒரு புனைப் பெயரை பாவியுங்கள் (தவறானதொரு ஈர்ப்பினை ஏற்படுத்தக்கூடிய பெயர்களை பயன்படுத்த வேண்டாம்)
- உங்கள் நண்பர்கள் ஆபத்து ஏற்படக்கூடிய நிலையில் உள்ளார்கள் என்று அறிந்தால் நடவடிக்கை எடுக்க தயங்க வேண்டாம்
- இணையத்தளத்தில் அளவளாவும் போது நீங்கள் பேசியவற்றின் பிரதியை பதிவுசெய்து வைத்துக்கொள்வதற்கு பழகிக்கொள்ளுங்கள்
- அளவளாவுவதற்கான வசதிபடுத்துனரின் விதிகளை மீறுகின்றவர்களைப் பற்றி முறைப்பாடு செய்யுங்கள


10B Class room
விஷ்வா! மகன், உன்ட பதில சொல்லு பார்ப்பம்
எனக்கு பதில் எழுத முடியாம போயிட்டது மிஸ்
விஷ்வா. ஏன் இப்படி? சரி.வகுப்பு முடிந்த பிறகு என்னை சந்தியும்.
பாரு சுமதி..... இன்றைக்கும் எனக்கு வீட்டு வேலைய செய்ய மறந்திடுச்சி
ம்....... நீ பொதுவா நல்லா படிக்கிற ஆளாச்சே, என்ன நடந்தது?


இல்ல, அப்படி ஒரு பிரச்சினையும் இல்ல.... ஆனா இப்ப சில மாதமா நான் மூன்று நண்பர்களோடு சேர்ந்து இன்டநெட்ட கேம் ஒன்று விளையாடுறன்
Multi Player Game ஒன்றா?
ஆமாம். அது ஒரு கள்ளர் கூட்டம் பற்றிய விளையாட்டு. நாங்க தான் கள்ளர்கள் அந்த விளையாட்டுல எங்கட பாதையில தடையா இருக்கிற யாரையும். கொன்றுபோட்டிடுவோம்
அம்மா! அது ஒரு பயங்கரமான விளையாட்டு போல இருக்கு, இப்படி விளையாட்டெல்லாம் விளையாடிட்டு இரவில நித்திரை போகுமா?


அது கொஞ்சம் வன்முறையான இன்டர்நெட் கேம் தான். ஆனா அந்த கேம் விளையாடுதற்கு எப்படா ஸ்கூல் முடியும்னு பார்த்துக்கொண்டே இருப்பன்.
ஸ்கூல்ல கொடுக்கற வீட்டு வேலைய அவசர அவசரமா செய்து முடிப்பன். அப்ப எனக்கு அந்த விளையாட்ட விளையாடலாமே.
அம்மா விளையாட்ட நிறுத்த சொன்ன எனக்கு கெட்ட கோபம் வரும். ஒரு நாளைக்கு மூன்று நாலு மணித்தியாலம் விளையாடுவன்
சில நாட்களில இரவும் விளையாடுவன். கேம் விளையாடாத நேரத்திலும் என்ட தலைக்கு கொஞ்சம் கூட ஓய்வில்ல. நான் அந்த விளையாட்டு நினைப்பிலேயே இருப்பன்.


சில நாட்கள்ல நான் காலையில் எழும்புற நேரம் தலை வெடிக்க போர மாதிரி வலிக்கும். ரொம்ப களைப்பா இருக்கும். ஸ்கூலுக்கு வரக்கூட விருப்பம் இருக்காது. ஸ்கூலுக்கு வந்தாலும் மிஸ் சொல்றதுத தலையில ஏறாது.
நீ இந்த விளையாட்டிலேயே நிறைய நேரத்த செலவழிக்கிற போல இருக்கு. அது உன்ட வாழ்கைக்கு சரியில்ல.
அது எல்லாம் எனக்கு விளங்குது சுமதி. ஆனா எனக்கு கேம் விளையாடாம இருக்கவே முடியாது.
கிரிக்கட் அடிக்கிறதுக்கு ருவன் கூப்பிட்டாலும் எனக்கு போக நினைக்காது. இப்ப அவன் என்னைய கூப்பிடுறதும் இல்ல. தங்கச்சி என்னோட பேசுறதுக்க என்ட அறைக்கு வந்தாலும் நான் அவள விரட்டியடிச்சிவன்


உன்ட இந்த இன்டநெட் விளையாட்டு உன்ட வாழ்கையில இருக்கிற எல்லா தொடர்புகளையும் குழைச்சிருச்சி போல தான் தெரியுது.
அது சரியில்ல விஷ்வா.............. நீ உன்ட ப்ரென்'களோட நேரத்த கொஞ்சம் செலவழிக்கனும். விளையாடனும். படிக்கவும் வேணும். அப்படித்தான?
ஆமா சுமதி. எனக்கே தெரியாம நான் அந்த இன்டநெட் விளையாட்டுக்கு அடிமையாகிட்டன். நான் அதுக்கு ஏதாவது செய்யனும்.
இந்த விளையாட்ட விளையாடுற நேரத்த கொஞ்சம் கட்டுப்படுத்திக்கிட்டா? அது நல்லதொரு ஆரம்பமா இருக்காதா?
ஆம். அது ஒரு நல்ல யோசனை. அதோட, எண்ட கம்ப்யூட்டரை என்னுடைய அறையில வைக்காம, பொது அறையில வைச்சா இன்னும் உதவியா இருக்கும்.
இப்படி செஞ்சா, நான் அதிக நேரம் கம்ப்யூட்டர்ல இருந்தால் என் அப்பா அம்மாவுக்கு தெரியும். அவங்க என் மேல ஒரு கண் வச்சி இருக்கலாமே.
அதுவும் நல்லது. அங்க பாரு, ருவானும் எங்கட நண்பர்களும் கிரிக்கெட் விளையாட போறாங்க. வா, நாங்களும் போவம்.

# இணையத்தின் வாயிலாக விளையாட்டுகளில் ஈடுபடுதல்

இணையம் அல்லது வேறு கணினி வலைப்பின்னலொன்றின் வாயிலாக விளையாக்கூடிய வீடியோ விளையாட்டுகள் இந்த வகையில் அடங்குகின்றன.இவ்வாறான விளையாட்டுகளில் ஈடுபடுவதில் எவ்வித தவறும் இல்லாவிடினும் நீங்கள் ஒரு நாளைக்கு பல மணித்தியாலங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் அல்லது நண்பர்களுடன் அளவளாவுதை விடுத்து கட்டயமாக வீடியோ விளையாட்டுகளில் ஈடுபடுகின்றீர்களாயின் அது உங்களுக்கு பாதகமானதாக அமையக்கூடும்.

சிந்தித்துப்பாருங்கள்.

- அளவளாவுதல் அறை விளையாட்டு அரங்குகளில் (chat room game forums)சந்திக்கின்ற அறிமுகமில்லாதவர்களுடன் எந்தவிதமான தனிப்பட்ட தகவல்களையும் பகிர்ந்துகொள்ளாதீர்கள்
- உங்களுடைய வீட்டுப் பாடங்களையும் ஏனைய பொறுப்புகளையும் உங்களின் முழு ஆற்றலையும் பயன்படுத்தி செய்து முடித்த பின்னர் மாத்திரமே நீங்கள் இணையத்தள விளையாட்டுகளில் ஈடுபடுகின்றீர்கள் என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள்
- உங்கள் வயதுக்கேற்ற விளையாட்டுகளை மாத்திரம் விளையாடுகின்றீர்கள் என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள்.
- நீங்கள் விளையாடும் நேரத்தை வரையறுத்துக்கொள்ளுங்கள்
- நிஜ வாழ்கையில் சந்திக்கின்றவர்களுடனும் நீங்கள் நேரத்தை செலவிடுகின்றீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- கணினிகளையும் ஏனைய கணினி விளையாட்டு உபகரணங்களையும் வீட்டின் பொதுவான இடத்தில் வையுங்கள்.
- மற்றுமொரு விளையாட்டு வீரர் உங்களை அசௌகரியப்படுத்துவதாக நீங்கள் உணர்ந்தால் வளர்ந்த ஒருவரிடம் கூறுங்கள்.
- உங்களை அசௌகரியப்படுத்தும் எவரேனுமொரு விளையாட்டு வீரர் இருந்தால் அவரை தடைப்படுத்துவதற்கு அலலது அது பற்றி முறைப்பாடு செய்வதற்கு கற்றுக்கொள்ளுங்கள்.


**ජාතික ළමා ආරක්ෂක අධිකාරිය**

නො 330, තලවතුගොඩ පාර,
මාදිවෙල,
ශ්‍රී ජයවර්ධනපුර,
ශ්‍රී ලංකා

Tele: +94 11 2 778 911 – 4
Email : ncpa@childprotection.gov.lk

www.childprotection.gov.lk